# புதியது

# 1 ஏப்ரல் 2022 முதல் உங்களுக்கான மருத்துவ நிலையங்கள்

## மருத்துவக் கட்டணங்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம்!

## நீங்கள்...

**கட்டுமானம், கடல் மற்றும் ரசாயனப் பெட்ரோலிய ஆகிய துறைகளில் வேலை அனுமதி மற்றும் எஸ்-பாஸ் வைத்திருப்பவர் <u>அல்லது</u>**

**தங்கும் விடுதிகளில் வசிப்பவர் என்றால்**

- உங்கள் முதலாளி உங்களுக்காக ஒரு முதன்மை பராமரிப்பு திட்டத்தை (PCP) வாங்க வேண்டும்*
- குடிபெயர்ந்த ஊழியர்களுக்காக நியமிக்கப்பட்ட மருத்துவ நிலையங்களுக்குச் (MCMWs)** சென்றால், ஒரு வருகையின்போது நீங்கள் $5 அல்லது தொலைமருத்துவச் சேவைக்கு $2 மட்டும் செலுத்த வேண்டும்.

**கட்டுமானம், கடல் மற்றும் ரசாயனப் பெட்ரோலிய ஆகிய துறைகளில வேலை செய்யவில்லை அல்லது**

**தங்கும் விடுதிகளில் வசிக்கவில்லை எனில்**

- உங்கள் மருத்துவக் கட்டணங்களை உங்கள் முதலாளி செலுத்துவார். உங்கள் முதலாளியுடன் ஏற்கனவே உள்ள ஏற்பாட்டின் அடிப்படையில் நீங்களும் கட்டணத்தில் ஒரு பகுதி செலுத்த வேண்டியிருக்கலாம்
- உங்களுக்கு உடல் நலமில்லை எனில், தயவுசெய்து குடிபெயர்ந்த ஊழியர்களுக்கான எந்தவொரு புதிய மருத்துவ நிலையம் (MCMWs), மருந்தகம் அல்லது தொலைமருத்தும் மூலம் மருத்துவரைப் பார்க்கவும்

*1 ஏப்ரல் 2022 மற்றும் 31 மார்ச் 2023 க்கு இடையில் வேலை அனுமதிச் சீட்டைப் புதுப்பிக்க வேண்டிய தேவையில்லாத ஊழியர்களுக்கு, உங்கள் முதலாளி உங்களுக்கான முதன்மை பராமரிப்பு திட்டத்தை (PCP), 31 மார்ச் 2023க்குள் வாங்க வேண்டும். இதற்கிடையில், நீங்கள் குடிபெயர்ந்த ஊழியர்களுக்கான புதிய மருத்துவ நிலையங்கள் (MCMWs) அல்லது தொலைமருத்துவம் மூலம் மருத்துவச் சேவையைப் பெறலாம். கட்டண அட்டவணையின் அடிப்படையில் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

** முதன்மை பராமரிப்பு திட்டத்தை (PCP) உடைய அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு வட்டாரத்திற்குள் உள்ள குடிபெயர்ந்த ஊழியர்களுக்கான புதிய மருத்துவ நிலையங்கள் (MCMWs) ஒதுக்கப்படும். உங்களுக்கு எந்த வட்டாரம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் அந்த வட்டாரத்தில் உள்ள குடிபெயர்ந்த ஊழியர்களுக்கான புதிய மருத்துவ நிலையங்கள் பற்றி அறியவும் FWMOMCare செயலியில் பார்க்கவும்.




## FWMOMCare செயலியின் மூலம், நீங்கள்:

- உங்களிடம் முதன்மை பராமரிப்பு திட்டம் (PCP) உள்ளதா எனச் சரிபார்க்காலம்
- குடிபெயர்ந்த ஊழியர்களுக்கான புதிய மருத்துவ நிலையங்ககளில் (MCMWs) மருத்துவச் சந்திப்புகளைப் பதிவு செய்யலாம்
- தொலைமருத்துவம் மூலம் மருத்துவரைப் பார்க்கலாம்
- உங்கள் அருகிலுள்ள குடிபெயர்ந்த ஊழியர்களுக்கான புதிய மருத்துவ நிலையங்களைக் (MCMWs) கண்டறியலாம்

**1 ஏப்ரல் 2022 முதல் FWMOMCARE செயலியில் உங்கள் அருகில் உள்ள மருத்துவ நிலையங்களைக் கண்டறியலாம்**